1987 எப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடி தர்காவானது பல மதங்களிலிருந்து, பல மாநிலங்களிலிருந்தும் அங்கு வந்து பிரார்த்தனை நடத்துவதற்குரிய இடமாக இருப்பதால் அங்கு சுகாதாரக் கேடும், மக்கள் தங்குவதற்கு இடையூறும் இருப்பதால் அந்த ஏர்வாடியை ஒரு நகரியமாக்க இனியாவது அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏர்வாடி ஊராட்சியை நகரியமாக மாற்றுவது சம்பந்தமாக பிரேரணை ஏதும் இதுவரையில் வரப் பெறவில்லை. அப்படி வந்தால் அரசு ஆராயும்.

பெரியார் மாவட்டம், உக்கரம் ஊராட்சியைப் பிரித்தல்.

46—(*வினா எண் 9160) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உக்கரம் ஊராட்சியை, வண்டிபாளையம் ஊராட்சி, உக்கரம் ஊராட்சி என இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப் படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பிரிப்பதற்கு முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பெரிய ஊராட்சி மன்றங்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் நலம் கருதி, அவற்றை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ள இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அண்மையில் ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்றதால் அரசு ஒரு தடை உத்தரவு பிறப்பித்திருந்தது, ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதோ மாற்றுவதோ கூடாது என்று. இந்தத் தடை உத்தரவு இன்னும் இருக்கிறது. பொதுவாக, ஊராட்சிகளின் மக்கள் தொகை, வருவாய், அவற்றைப் பிரிப்ப தால் இரண்டு ஊராட்சிகளும் தனித்து இயங்குமா என்பன போன்றவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்தாலோ சித்துதான் முடிவெடுக்க வேண்டும்.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு இரண்டு மூன்று ஊராட்சி மன்றங்களை, கோவையிலிருந்து பெரியார் மாவட்டத்திற்கு மாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து அவற்றை இணைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது ஊராட்சி மன்றங்களைப் பற்றிய கேள்வி. ஒரு மாவட்டத் திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குப் போக வேண்டு மென்றால், 'ரெவின்யூ' கூட அதிலே வரும். ஆகையினாலே, இதையெல்லாம் பார்த்து பரிசீலித்து, முடிவெடுக்க வேண்டி வரும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதற்கு, உள்ளாட்சித் தேர்தல் நடந்த காரணத்தினால், தடை இருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக விரைவில் அரசு அதைப் பரிசீலித்து, அந்தத் தடையை நீக்கி, பெரிய ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் தடை நீக்க உத்திரவு பிறப்பிக்கப் படும்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரியத்தில் தேர்தல் நடத்த அரசுக்கு ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சந்தியமங்கலம் ஒன்றியத்திலுள்ள உக்கரம் ஊராட்சி பற்றிய கேள்வி.

திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் குறைவாக உள்ள ஊராட்சிகளுக்கு ஹவுசிங் டாக்ஸ் மேச்சிங் கிராண்ட் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்காது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பகுதிகளிலே பேரூராட்சிகள் வருமானம் இல்லாமலே இருக்கின்றன. அதற்கு அருகிலே மிகச் சிறிய ஊராட்சிகள் கூட 5, 6 லட்சம் ரூபாய் வருவாய் உள்ளவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் அந்த ஊராட்சி மன்றங்களையும் பேரூராட்சி மன்றங்களையும் இணைத்து அந்தப் பேரூராட்சிகளுக்கு வருவாய் கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய எல்லா ஆலோசனைகளையும் அரசு விதித்த தடையை நீக்கியதற்குப் பிறகு ஆங்காங்கே உள்ளவர்கள் அதற்கென மனுச் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

வேதாரணியம் பேரூராட்சிக்கு உப்பிலாக்கா நிதி

47—(*வினா எண் 9408) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரணியம் பேரூராட்சி 6-வது பாலத்திற்கு உப்பிலாக்கா நிதியுதவ முன்வந்தது அரசுக்குத் தெரியுமா?